Registered as a News Paper    மக்கங்கள் 04    விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம் 03    திருவள்ளுவர் ஆண்டு 2203    ஐப்பசி 30    (15-11-1992)    ஞாயிற்றுக்கிழமை    ஓசை 271

Y.M.C.A

## இலங்கை மக்கள் தலா 2,22000 ரூபா கடனாளிகள்

நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் தலா] 2.22,000 ரூபா வெளிநாடுகளுக்குக் கடனாகச் செலுத்த வேண்டி இருக்கிறது என்றும், பெரும் பொருளாதாரச் சுமைக்கு இலக்காகி நாடு வறியதாகியுள்ளது என்றும் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், மக்கள் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்தவருமான பந்துல குணவர்த்தனா குறிப்பிட்டார். வரவு செலவுத்திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், 1977 முதல் ஆள் வீதக் கடன்தொகை அதிகரித்துவருவதாகவும், மீளச்செலுத்தப்படாத கடனாக 24,986 மில்லியன் ரூபா தற்போது இருக்கின்றது எனவும் குறிப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# நாடு அரசியல்வாதிகளினால் ‘அங்கொட’ போல் ஆகிவிட்டது

## போர்முனைப் பிரதேசத்திற்கு ரஷ்யாவிலிருந்து டாக்டர்கள்

(கொழும்பு)

வடக்கு - கிழக்குப் போர் முனைப் பகுதிகளில் சேவையில் ஈடுபடுவதற்கென ரஷ்யாவிலிருந்து டாக்டர்களை வரவழைக்கும் முயற்சியில் சிறிலங்கா அரசாங்கம் தற்போது ஈடுபட்டுள்ளது.

சுகாதார மகளிர் விவகார அமைச்சு இதற்கென கொழும்பிலுள்ள ரஷ்ய தூதுவராலயத்துடன் பேச்சுக்கள் நடத்தி வருவதாகவும், ரஷ்ய டாக்டர்களைச் சேவையில் அமர்த்துவது தொடர்பான நிபந்தனைகள் மற்றும் விபரங்கள் பற்றி ஆராயப்பட்டு வருவதாகவும் சுகாதார அமைச்சு செயலாளர் டாக்டர் ஜோ. பெரிணாண்டோ கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், மாஸ்கோவிலுள்ள சிறிலங்காத் தூதுவரினூடாக ரஷ்ய டாக்டர்களைத் தருவிக்கும் முயற்சியில் சுகாதார மகளிர் விவகார அமைச்சு நேரடியாக ஈடுபட்டதாகவும், பாகிஸ்

(4ஆம் பக்கம் பார்க்க)

## பௌத்த பிக்கு கண்டனம்

நாடுபூராகவும் இப்பொழுது பெரும் குழப்பமாக உள்ளது. கொழும்புப் புறநகர்ப் பகுதியில் முன்பு ஒரு ‘அங்கொட’ தான் இருந்தது. ஆனால் இன்று முழு நாடுமே அங்கொடயாக மாறியுள்ளது. இதற்கான முழுப்பொறுப்பையும் அரசியல் வாதிகளே ஏற்கவேண்டும். இவ்வாறு மல்வத்த விகார சிறிசங்கராஜ, பிரிவின் முன்னாள் அதிபர் பண்டித அம்பல்வெல பஞ்ஞாசேகர நாயக்கதேரோ தெரிவித்தார்,

கண்டி பௌத்த இளைஞர் சங்க மண்டபத்தில் பௌத்தமும் அரசியலும் என்ற தலைப்பில் உரைநிகழ்த்திய அவர் மேலும் குறிப்பிடுகையில்; நாடு முழுவதும் இப்போது குழப்பத்தில் ஆழ்த்தப்பட்டிருப்பதாகவும், நாட்டில் சீரின்மை ஏற்படுவதற்கு அரசியல் வாதிவாதிகளே முழுக்காரணம் என்றும் குறிப்பிட்டார்.

அத்துடன் பௌத்த மதகுருமார் முன்பு வாக்களிப்பதிலிருந்து கூட ஒதுங்கியே இருந்தனர். வாக்களிப்பில் கலந்து யாராவது ஒரு தரப்பினருக்கு வாக்களிப்பது மூலம் பக்கம் சார்ந்ததென்ற நிலைமை ஏற்படும் என்றே பௌத்த மத குருமார் முன்பு எண்ணியிருந்தனர். இப்போது இந்த நிலை எல்லாம் மாறிவிட்டது. மக்கள் மத்தியில் மதநம்பிக்கைகள் வலுவிழந்து வருகின்றன. கடந்த காலத்தில் பௌத்த பிக்குகளே பௌத்த சிலையைத்தொடுவதற்கு தயக்கம் காட்டினர் தூசுகள் துடைப்பதானால் கூட அதற்கு முன்பாக அச்சிலையை வணங்கி விட்டு அதன் பின்பே தூய துணியை எடுத்துத் தூசுதுடைப்பது வழக்கமாக இருந்தது. ஆனால் இப்போது பௌத்த சிலைகள்கூட எந்தக் கருணையுமின்றி சம்மட்டிகளால் உடைக்கப்படுகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.

## உயிரிழக்கும் உறுப்பினருக்கு நட்ட ஈடு வேண்டுமாம்

### • கொழும்பு தமிழ்குழுக்கள் கோரிக்கை

சிறிலங்கா இராணுவத்துடன் இணைந்து செயற்படும் ...

நட்டஈடு தமக்கு கிடைக்கவில்லை எனவும், உயிரிழப்ப ...

ணுவத்தினரைப் போன்ற வசதிகளோ நட்டஈடுகளோ ...

## அராலி நோக்கி எறிகணைத்தாக்கு

(யாழ்ப்பாணம்)

அராலித்துறைப் பகுதியில் நிலைகொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று கல்லுண்டாய், அராலி ஆகிய பகுதிகளை நோக்கி சரமாரியான எறிகணைத் தாக்குதல்களை நடாத்தியுள்ளனர்.

அதேவேளை அராலித்துறைப் பகுதியில் காலை முதல் மாலை வரைதொடர்ச்சியான துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் குண்டு வெடிப்புச் சத்தங்களும் கேட்டவண்ணமிருந்தன.

## தீவுப்பகுதியில் ஹெலி நடமாட்டம்

(குருநகர்)

நேற்றுக் காலையிலிருந்து மாலை வரையில் சிறிலங்கா விமானப்படை உலங்குவானூர்திகள் பல தடவைகள் தீவுப் பகுதி முகாம்களில் தரையிறங்கிச் சென்றன.

பூநகரி - கல்முனை, மண்டைதீவு, வேலணை, ஊர்காவற்றுறை, காரைநகர் முகாம்களுக்கு இடையே வானூர்திகள் போக்குவரத்தில் ஈடுபட்டதுடன் பல தடவைகள் தரை இறங்கிச் சென்றதை அவதானிக்க முடிந்தது. (21)

நேற்றுமுன்தினம் பெய்த கடும் மழையினால் மானிப்பாய் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள இடம்பெயர்ந்தோர் குடிசைகளினுள் வெள்ளம் புகுந்திருப்பதை மேலுள்ள படத்தில் காணலாம்.



## மாவீரரை நினைக்கையில் உறுதி பெருகுகிறது

உயிர்களை நேசித்தவர்கள்- ஆனால், தங்கள் உயிர்களை யல்ல. சாவினை ஏற்றவர்கள்- ஆனால், பிறரின் சாவினை யல்ல. இவர்கள்தான் மாவீரர்கள். ‘வாழவேண்டுமென்ற துடிப்பு சாவிலும் வலியது’ என்பது ஒரு வியட்நாமியக் குரல். எங்களது மாவீரர்கள் நிதர்சனமாக்கினர். வாழவேண் ... கொண்டார்கள் இவ்வாறு மாவீரர் நாள் தொடர்பாக விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறையினர் விடுத்த அறிக்கையில் தெரி ...

துடன் இணைந்து செயற்படும் தமிழ்க் குழுக்கள் காயமடையும் அல்லது உயிரிழக்கும் தமது உறுப்பினர்களுக்கும், அரசாங்கம் போதுமான அளவு நட்டஈடுதர வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளன.

இக் குழுக்களின் பிரதிநிதிகள் சிலர் இது பற்றிக் கூறுகையில்; அரசியல் மற்றும் இராணுவ தலைமைப்பீடங்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கும் போது இதுவரை இத்தகைய

வில்லை எனவும், உயிரிழப்பதில் சிங்களப் படையினர் மற்றும் தமிழ் இளைஞர்களுக்கு இடையே வேறுபாடு எதுவும் இல்லை எனவும் கூறியுள்ளனர்.

இந்த இரண்டு வருடத்தில் புளொட் மற்றும் ரெலோ குழுக்களைச் சேர்ந்த ஐம்பது பேர் வரை உயிரிழந்துள்ளனர். நூறு பேர் வரையில் காயமடைந்து உள்ளனர் எனவும், இவர்களில் எவருக்கும் இரா

வசதிகளோ நட்டஈடுகளோ கிடைக்கவில்லை எனவும் கூறப்படுகிறது.

இவ்வகையில் ஈ. பி. டி. பி குழுவினரும் பாதிக்கப்பட்டுள்ளனர். போரில் ஈடுபட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்கும் அதிகாரிகளிடம் கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்கள் உத்தியோகப் பற்றற்ற முறையில் இது பற்றி பேச்சு நடத்தியிருப்பதாகவும், மேலும் கூறப்படுகிறது.

# 'கன்ரபரி' அதிமேற்றாணியாரை யாழ். அழைத்துவர முயற்சி

(யாழ்ப்பாணம்)

கொழும்பிற்கு அடுத்த மாதம் ஆத்மீக விஜயத்தை மேற்கொள்ளவிருக்கும் கன்ரபரி அதிமேற்றானியார் ஜோர்ஜ் கேரி யாழ்ப்பாணத்திற்கும் விஜயம் செய்யலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதிமேற்றாணியாரை யாழ்ப்பாணம் அழைத்துவர சிலர் தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆன்மீகத் தலைவர் கன்ரபரி அதிமேற்றாணியார் ஜோர்ஜ் கேரி உலகிலுள்ள ஏழுகோடி அங்கிலிக்கன்கிறிஸ்தவர்களின் தலைவராவார்.

கொழும்பின் 13-வது அங்கிலிக்கன் மேற்றாணியாராக வண. கெனத் பெர்னான்டோ திருநிலைப்படுத்தும் விழாவுக்கு தலைமைவகிக்கவே அவர் கொழும்பிற்கு விஜயம் செய்யவுள்ளார் மேற்றாணியார் வண. ஜே. ஞானப்பிரகாசம் ஓய்வு பெறும் இடத்துக்கு வண கெனத் பெர்னான்டோ மேற்றாணியாராகத்திருநிலைப்படுத்தப்படுகிறார்.

இதே வேளை, கொழும்பு வரும் அதிமேற்றாணியாரை

( 4 ஆம் பக்கம் பார்க்க )

# மாவீரர் வாரத்தில் 1000 பேருக்கு தமிழீழ மீட்பு நிதி மீளளிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மீட்பு நிதி கடன் திட்டத்திற்குப் பங்களிப்புச் செய்த, தேர்ந்தெடுக்கப்பட்ட 1000 கடன் பத்திரதாரர்களின் கடன் 1992 ஆம் ஆண்டு மாவீரர் வாரத்தில் மீளளிக்கப்படவுள்ளது. இதனை தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதிப் பொறுப்பாளர் செ. தமிழேந்தி பத்திரிகைகளுக்கு விடுத்த செய்திக் குறிப்பொன்றில் மக்களுக்கு நன்றியுடன் தெரியப்படுத்தியுள்ளார்.

(ஒரு தொகுதி கடன் மீளளிப்பு விபரம் 4ம் பக்கத்தில்)

**அஞ்சலிகள் போதாது அணியணியாய்**
**அவர் வழியில் துஞ்சாது போராடத்துணி**

னிக்க முடிந்தது. (21)

# வட்ட ரீதியாக இன்று எழுச்சி வார கருத்தரங்குகள்

மாவீரர் வாரத்தை முன்னிட்டு யாழ். குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இன்று எழுச்சி வாரம் ஆரம்பமாகின்றது.

இவ்வெழுச்சி வாரத்தில் வீதிகள், வைத்தியசாலைகள் இடம் பெயர்ந்தோர் முகாம்கள், வாய்க்கால்கள், பாடசாலைச் சுற்றுப்புறங்கள் ஆகியனவற்றில் சிரமதான வேலைகள் நடைபெறவுள்ளன. இச் சிரமதான வேலைகளில் பொதுமக்கள், பொது ஸ்தாபனங்களுட்பட பல்வேறு துறைகளைச் சார்ந்தவர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேலும் வீதிகளில் நிழல் மரங்கள் நாட்டுதலோடு கிராமங்கள் தோறும் மாவீரர்களை நினைவு கூரும் எழுச்சிக் கருத்தரங்குகளும் நடைபெறவுள்ளன.

இன்று யாழ். குடாநாட்டின் பல்வேறு இடங்களில்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

யல்ல. இவர்கள்தான் மாவீரர் நிதர்சனமாகின்றனர். வாழவேண்டுமென்ற துடிப்பு அவர்களிடம் அபாரம். ஆனால், தங்கள் வாழ்வை எண்ணியல்ல. தம் இனததின் வாழ்வை எண்ணிய, எதிர்கால சந்ததியின் வாழ்வை எண்ணிய, தாயக சுதந்திரத்தின் வாழ்வை எண்ணிய, உன்னதமிகு துடிப்பு. ஆதலால் வெல்லமென உயிர் இவர்களுக்குச் சுவைக்கவில்லை; சாவினைத் துச்சமென நேருக்குநேர் சந்தித்துக் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகிலே மிகச் சிறந்ததெனக் கருதப்பட்டு வந்தன சில தானங்கள். அவற்றினது பெறுமதியே இழந்து போய் விட்டது எம் மவீரர் தானத்தால். இது உயிர்த்தானம். வளைந்து கிடந்த இனத்தை நிமிரச்செய்தது; எம் தேசிய எல்லைகளை உணரவைத்தது; தேசியக்கொடியினை உயர்த்த

( 4 ஆம் பக்கம் பார்க்க )

# மாவீரர் எழுச்சிவாரம் இன்று உணர்வுபூர்வமாக ஆரம்பம்

தமிழீழ தாயக விடுதலைப் போராட்டத்தில் தம் உயிர்களை ஈய்ந்த மாவீரர்களை நினைவில் நிறுத்தும் மாவீரர் நாளை முன்னிட்டு இன்று முதல் மாவீரர் எழிச்சி வாரம் அனுஷ்டிக்கப்படவிருக்கிறது

மாவீரர்களை நினைவுகூரும் முகமாக நினைவுகூரல் நிகழ்ச்சிகள், சிரமதானப் பணிகள், மாவீரர் நினைவு வளைவுகள், நினைவுச் சிகரங்கள், போன்ற பல்வேறு வடிவங்களின் ஊடாக தமிழீழ மக்கள் அனைவரும் உணர்வுபூர்வமாக பங்குபற்றும் வகையிலான மாவீரர் எழிச்சிவாரம் இன்று முதல் தமிழீழம் எங்கும் ஆரம்பமாகிறது.

இந்த மாவீரர் எழிச்சி வாரத்தை முன்னிட்டு தமிழீழம் எங்கும் எழிச்சி கோலம் பூண்டிருக்கிறது. சுமார் இரண்டு வாரங்களுக்கு முன்னரே தமிழீழத்தில் பல்வேறு பகுதிகளிலும் மாவீரர் எழுச்சி வாரத்திற்கான ஏற்பாடுகள் ஆரம்பமாகிவிட்டன.

பிரதான வீதிகள், பொது இடங்கள், கேந்திர நிலையங்கள், சனசமூக நிலையங்கள், மாதர் சங்கங்கள், கிராம அபி

4 ஆம் பக்கம் பார்க்க)

# 28 பரல் மண்ணெய் கிளாலி கடலில் விடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் ஒன்றுக்குச் சொந்தமான 28 பெரல் மண்ணெண்ணையும், 8 பெரல் மரக்கறி எண்ணையும் 12-11-92 அன்று வியாழக்கிழமை இரவு கிளாலிக் கடலில் படகில் தொடுத்து இழுத்துக் கொண்டு வரும் வேளை கடற்படையினர் வருவதைக் கண்டு அச்சத்தினால் படகோட்டிகள் பெரல்களை தொடராக கடலில் அவிழ்த்து விட்டுப் படகுடன் கிளாலிக் கரையை அடைந்துள்ளனர். இவ் எண்ணைகளின் பெறுமதி 360000 ரூபா என கூறப்படுகிறது இன்று வரைக்கும் இ எண்ணை பெரல்கள் மீட்கப்படவில்லை எனக் கூட்டுறவுச் சங்க வட்டாரங்களில் இருந்து கூறப்படுகின்றது.

(88)

# இனப்பிரச்சினை தீர்க்காமல் அபிவிருத்திசெய்யமுடியாது

(கொழும்பு)

– தேவராஜ்

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் அபிவிருத்தி வேலைகளைச் செய்ய முடியாது என்றும், சகல கட்சிகளும் இணைந்தாலேயே இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்றும் அமைச்சர் பீ. பீ. தேவராஜ் குறிப்பிட்டார். வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய அமைச்சர் மேலும் கூறுகையில்; தமிழ் எம். பிக்கள் வரவு செலவுத் திட்டத்தில் வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு போதாது எனக் கூறுவதில் அர்த்தம் எதுவுமில்லை என்றும் குறிப்பிட்டார்.


**வீடியோ படப்பிடிப்பாளர்கட்கு.....**

யாழ். மாவட்டத்தில் வீடியோ படப்பிடிப்பு செய்யும் சகலருக்குமான கூட்டமொன்று 1992 11-16 [திங்கள்] காலை 10மணிக்கு நிதர்சனம் செயலகத்தில் நடைபெறும். சகல வீடியோ படப்பிடிப்பாளர்களும் இக் கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளவும்.

பொறுப்பாளர்,
**நிதர்சனம்,**
தீப் வீதி,
திருநெல்வேலி.

(3638)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

அழகிய படத்துடனான கலண்டர்கள் விற்பனையாகின்றன. பல வர்ணக் கலர்களில் விலாசம் பதிப்பித்தும்பெற்றுக் கொள்ளலாம். வியாபாரிகள் தங்களின் தேவைக்கேற்றபடி கொள்வனவு செய்து ஏமாற்றத்தைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். ஸ்ரீ காந்தா அச்சகம் -புத்தகசாலை 330, காங்கேசன் துறைவீதி, யாழ்ப்பாணம். (3640)

### கடிகாரமா? றேடியோவா?

உங்கள் கடிகாரங்கள், றேடியோக்களை உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள எம்மை நாடுங்கள். (சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு.) தரமான கடிகாரங்கள், றேடியோக்கள் நியாய விலைக்கு விற்றுத் தரப்படும். டில்கா வாச் வேக்ஸ், 284 ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமையில்) யாழ்ப்பாணம். கிளை: பஸ் நிலையம், சாவகச்சேரி (சி 5399)

### தென்மராட்சி வாடிக்கையாளர்கட்கு

தென்மராட்சி மக்களுக்கு டில்காவின் சேவை! உங்கள் கடிகாரங்கள், றேடியோக்கள் யாவும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகல பற்றறிகளும் எம்மிடம் உண்டு டில்கா வாச்வேக்ஸ் பஸ் நிலையம், சாவகச்சேரி. (சி-5400)

### எம் ஜி. ஆர். திருமணசேவை

வெளி நாடுகளில் தொழில் புரியும் செவ்வாய்க் குற்றம் உள்ள, குற்றம் அற்ற ஆண்களுக்கு பொருத்தமான மணமகள்கள் தேவை. இலங்கையில் வந்து விவாகம் செய்யலாம். தொடர்பு: எம். ஜி. ஆர் திருமண சேவை வே. புண்ணியமூர்த்தி, புத்தூர்ச் சந்தி, மீசாலை. (3358)

### மாணவர்களுக்கு

பாடசாலைப் பிள்ளைகளுக்கான அப்பியாசக் கொப்பிகள், புத்தகங்கள் மலிவில் விற்பனையாகிறது. றோனியோ குறைந்த விலையில் செய்து கொடுக்கப்படுகிறது. அறிவகம் புத்தகசாலை வெலிங்டன்

---

வட மாகாண ஆசிரியர்

## ஊக்குவிப்புப் பணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பணிப்பு

யாழ் மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளைக் கஷ்டப் பிரதேசப் பாடசாலைகள், மிகக் கஷ்டப் பிரதேசப் பாடசாலைகள் என்று வகைப்படுத்தும் முறையை மீளாய்வு செய்து அவற்றுக்கான விசேட கொடுப்பனவுகளை வழங்க நடவடிக்கை எடுக்கும்படி வட கிழக்கு மாகாண ஆளுநர் மாகாண அமைச்சின் செயலாளரைப் பணித்துள்ளார்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தூதுக்குழு மாகாண ஆளுநரைச் சந்தித்து நடாத்திய பேச்சுவார்த்தையைத் தொடர்ந்தே இந்தப் பணிப்புரை விடுக்கப்பட்டிருக்கிறது

மேற்படி சங்கத்தின் செயலாளர் திரு. த. மகாசிவம், துணைத்தலைவர் திரு. எஸ். தேவதாசன் மற்றும் தண்டாயுதபாணி, திரு ந. இராஜநாதன் ஆகியோர் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

மேலும் 1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் தொடக்கம் டிசம்பர்மாதம் வரைக்குமான ஊக்குவிப்புப்பணத்தை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் உள்ள இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் உள்ள பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாவட்ட, கோட்ட மற்றும் திணைக்கள ஊழியர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கும்படியும் பணிப்புரை வழங்கப்பட்டிருக்கிறது.

மாகாண அமைச்சு. மாவட்டம், கோட்டம், ஆகிய மட்டங்களில் அதிபர், ஆசிரியர் ஆகியோரின் இடமாற்றங்கள் செய்யப்படும்போது ஆசிரியத் தொழிற் சங்கப் பிரதிநிதிகளைக் கொண்ட இடமாற்றச் சபை மூலமே மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் மேற்படி சந்திப்பில் தீர்மானிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

---

மட்டக்குளியாவில்

## கைக்குண்டு தயாரித்தனராம் இருவர் பொலிசாரால் கைது

(மட்டக்குளியா)

மட்டக்குளியாவில் கைக்குண்டு தயாரித்த தொழிற்சாலை ஒன்றை முகத்துவாரப் பொலிசார் சுற்றி வளைத்துள்ளனர் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தநபர்களினால் உற்பத்தி செய்யப்பட்ட சுமார் 100 கைக்குண்டுகளும் அதற்கான பல மூலப் பொருள்களையும் கைப்பற்றிஉள்ளனர் நாட்டில் உள்ள கொள்ளை குழுக்களுக்கு ஆயுதங்களையும் வெடிமருந்துகளையும் இந்த குழு விநியோகித்து வந்ததாக பொலிஸ் விசாரணையில் இருந்து தெரிய வந்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் முன்னர் பாதுகாப்பு பிரிவில் உயர் பதவி வகித்துள்ளனர்.

### திருடர் நடமாட்டம்

அல்வாய் தெற்குப் பகுதியில் இரவு வேளையில் திருடர்கள் நடமாட்டம் காணப்படுவதாக தெரியவருகிறது.

நேற்று முன் தினமஇரவு இப் பகுதியில்இரு வீடுகளில் திருட முற்பட்ட திருடனை துரத்திப் பிடிப்பதில் இப்பகுதி இளைஞர்கள் முற்பட்ட போதிலும் திருடன் சாதுரியமாக ஓடித்தப்பி விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (யோ)

### 140 ஆவது ஜன்ம தினம்

பருத்தித்துறை தூய அன்னை ஸ்ரீ சாரதாதேவியின் 140 ஆவது ஜன்ம தினம் எதிர்

### கோப்பி விற்கும் பெண்கள் கைது

(கொழும்பு)

ரயிலில் கோப்பி விற்கும் இரண்டு பெண்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். கொழுப்பு. வவுனியா ரயிலில் பயணம் செய்த பயணிகள் பலர் தமது உடைமைகளை பறிகொடுத்த சம்பவம் தொடர்பாக கோப்பி விற்கும் பெண்கள் இருவரை மாகோ ரயில்வேப் பாதுகாப்பு பொலிசார் சந்தேகத்தின் பேரில் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர்.

### இலவச கணித வகுப்பு

வறிய, இடம்பெயர்ந்த மாணவர்களின் நன்மை கருதி வருகின்ற பரீட்சையை கருத்திற்கொண்டு மடுவில் கமலாசனி வித்தியாலயத்தில் திங்கள், புதன், வெள்ளி ஆகிய கிழமைகளில் மாலை 4.00

---

## கிழக்கு பல்கலைக் குறைபாடுகள் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டும்

### அனைத்து பல்கலைக்கழகமாணவர் ஒன்றியம்

மட்டக்களப்பில் இயங்கும் கிழக்குப் பல்கலைக் கழகத்தின் குறைபாடுகளை தீர்க்க உடனடி நடவடிக்கை எடுக்கப்படாது போனால், அகில இலங்கை ரீதியாக பல்கலைக் கழகங்கள் ஒன்றிணைந்து நடவடிக்கையில் ஈடுபட நேரும் என்று அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் கூறியுள்ளது.

இது தொடர்பாக பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவின் தலைவர் பேராசிரியர் அலுக் அலுவிகாரவிற்கு மாணவர் ஒன்றியம் எழுதியுள்ள கடிதம் ஒன்றில் மேலும், மட்டக்களப்பு பல்கலைக்கழக மாணவர்களின் குறைபாடுகளைப் போக்க பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவும், நிர்வாகமும் உடனடி நடவடிக்கை எடுக்காமையையிட்டு ஆழ்ந்த கவலையடைவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

## 45-ம் நாள் நினைவஞ்சலி



### 2-ம் லெப். மங்கை (தர்சா)

[சிவநாதன் பாமினி - இளவாலை]

02-10-92 அன்று கட்டைக்காட்டு மினிமுகாம் தகர்ப்பின் போது வீரச்சாவடைந்தார்.

வீரஜனனம் 02.04.1975 — வீரச்சாவு 02.10.1992

எங்கள் தேசத்து எல்லையை மீட்க
பொங்கும் உணர்வுடனே புறப்பட்டு
வேங்கைகள் அணியில் விருப்புடன் இணைந்த
எங்களின் தங்கமே! மங்கையே!! - நீர்
சென்ற திசையில் தொடர்கிறோம்.
வென்று முடிப்போம் - விடுதலை நமக்காகும்.

BC லேன்,
கோப்பாய் தெற்கு. (3617) - குடும்பத்தினர்

---

## 45-ம் நாள் நினைவஞ்சலி



---

## இலங்கைக் குழந்தைகள் 1லட். ரூபாவிற்கு விற்பனை

சட்டத்தில் இருக்கும் ஓட்டைகளைப் பயன்படுத்தி வெளிநாடுகளுக்கு கடத்தப்படும் இலங்கைக் குழந்தைகள் வெளிநாடுகளில் ஒரு லட்சத்திற்கும் கூடுதலான விலையில் விற்கப்படுவதாக தெரியவருகிறது.

தபாரிப்புப் பெற்றோர் திட்டத்தின் கீழ் குழந்தைகள் மற்றநபர்களினால் பொறுப்பேற்கும் விடயத்தில் தலையிடுவதற்கு தனிநபர்கள் மற்றும் அமைப்புகளுக்கு சட்டத்தின்மூலம் தடை விதிக்கப்பட்டிருப்பது தெரிந்ததே நெதர்லாந்து, சுவீடன், நோர்வே, ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி, மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகளிலிருந்தும்பெருமளவிலான தபாரிப்பு பெற்றோர் இலங்கைக் குழந்தைகள் மேல் நாட்டம் கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது

---

## 2-ம் ஆண்டு நினைவலைகள்



### லெப்டினன்ட் சுபராஜ்

[நவரெத்தினம் பரஞ்சோதி]

வீரப்பிறப்பு 3-06-1971 — வீரச்சாவு 15-11-1990

சுதந்திரம் வேண்டி நடாத்திடும் யாகத்தில்
இதந்தரும் மனதனை நீக்கி
இலட்சியப் போருக்கு நித்தமும் உழைத்தவன்
வானமென்னும் மேடையிலே
வந்துலாவும் நிலாப்போல
மானமதை காப்பதற்காய்
காரைநகரிலே களம் பொலிந்த இடத்தினிலே
சேய் இவன் சிந்தினான் செங்குருதியை
எம் செல்வமே!
ஈராண்டு ஆனாலும் நூறாண்டு சென்றாலும்
மாறாது எம் பாசம் ஆறாது எம் துயரம்...

களபூமி,
காரைநகர். — குடும்பத்தினர் (3635)

கொடுக்கப்படுகிறது. அறிவகம் புத்தகசாலை வெலிங்டன் சந்திக்கருகாமை, யாழ்ப்பாணம். (சி-5409)

அன்னை ஸ்ரீ சாரதாதேவியின் 140 ஆவது ஜன்ம தினம் எதிர்வரும் 16 ஆம் திகதி புதன்கிழமை பருத்தித்துறை சேவாச்சிரமத்தில் பக்தி பூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது. (யோ)

சன் வித்தியாலயத்தில் திங்கள், புதன், வெள்ளி ஆகிய கிழமைகளில் மாலை 4.00 மணிக்கு ஆசிரியர் நித்தியானந்தத்தினால் இரு மணி நேர இலவச, க. பொ. த. (சா/த) வகுப்பினருக்கான கணிதபாடவகுப்புக்கள் இடம் பெறுகின்றன. இதில் 100 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் படித்து பயன்பெறுவது குறிப்பிடத்தக்கது ஆகும்.

## மொழித்திறன் பரீட்சை

இருபாலை தமிழ்மாமன்றம் பாடசாலை மாணவர்களின் தமிழ் மொழி அறிவை வளர்க்கும் நன்நோக்குடன் மொழித்திறன் தேர்வுப் பரீட்சையினைப் பாடசாலை மாணவர்களுக்கு இடையில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் நடாத்தவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் 3,000 ற்கும் அதிகமான மாணவர்கள் இத்தேர்வுப் பரீட்சையில் பங்குபற்றவுள்ளனர். (24)

## மரநடுகைப் போட்டி கலந்துரையாடல்

மர நடுகைப் போட்டித் திட்டத்தில் பங்குபற்றும் மாணவர்கள் மற்றும் கல்லூரி அதிபர்களையும் கொத்தணிக்குழு கோட்டக்குழுவில் உள்ள ஆசிரியர் உறுப்பினர்களையும் நாளை காலை ஒன்பது மணியளவில் யாழ் இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும் கலந்துரையாடலுக்கு சமுகமளிக்கும்படி பிரதிக்கல்விப்பணிப்பாளர் வேலாயுதம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## இடமாற்றம் ரத்துசெய்ய பணிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவத்திற்கு யா/சன்மார்க்க மகா வித்தியாலயத்திற்கு வழங்கிய இடமாற்றத்தை உடன் இரத்துச் செய்யும்படி வடகிழக்கு மாகாணசபையின் கல்வி, கலாசார விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் யாழ். மாவட்டக் கல்விப்பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கத்தைப் பணித்துள்ளார். அத்துடன் இவ் இடமாற்றத்தை திடீரெனச் செய்தமைக்கான விளக்கமான அறிக்கையையும் உடன் சமர்ப்பிக்குமாறு பணிப்பாளரைக் கோரியுள்ளார்.

## இலவச பால்மா

(வேலணை)

தீவகத்தில் இருந்து இடம் பெயர்ந்து யாழ் குடாநாட்டில் உள்ள பல்வேறு அகதிகள் முகாம்களில் தங்கியுள்ள குழந்தைகளுக்கு இலவசமாக பால்மா வழங்கப்படவுள்ளது.

ஆறு மாதங்களுக்கு மேலாகவும் ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு வேலணைப் பிரதேச சபை இலவச பால்மா வழங்குவதற்கு முன்வந்திருக்கிறது. (24)

## அழைப்பு

யாழ். இந்துக்கல்லூரி
பழைய மாணவர் சங்கம் நடாத்தும்
நினைவுச் சொற்பொழிவுத் தொடரில்
அமரர் V. M. ஆசைப்பிள்ளை அவர்களின்
(அதிபர் யாழ். இ. க. 1952 — 1961)

### நினைவுப் பேருரை

இடம்:- குமாரசுவாமி மண்டபம்
காலம்:- 16-11-92 (திங்கள்)
நேரம்:- மாலை 3.00 மணி
பொருள்:- 'இனத்துவமும் தேசிய வாதமும்' -அரசியல் பரிமாணங்கள்
பேருரை:- பேராசிரியர் N. பாலகிருஷ்ணன்
(தலைவர்; வர்த்தக முகாமைத்துவத்துறை யாழ். பல்கலைக்கழகம்)

யாழ். இ. க. ப. மா. ச.
பாலசுப்பிரமணியம் தவபாலன்
செயலாளர்.

(சி/5380)



## 2-ம் லெப். சூரியகலா

(சித்திரா ஆனந்தராஜா)
வட்டுக்கோட்டை

வீரப்பிறப்பு 18-11-1976
வீரச்சாவு 02-10-1992

களம் பல வெற்றி கண்ட
கன்னியே! உன்னையிந்த
நிலம் இனி வணங்கி என்றும்
நெஞ்சிலே ஏந்தி நிற்கும்!
வளம் மிகு ஈழ மண்ணில்,
வஞ்சியே! உன்னை வாழ்த்தும்
உளம் பல இருக்குமென்று
உறுதி நான் கூறுகின்றேன் !!

பெற்றவர் பெருமை ஓங்கப்
பெண்மையின் கீர்த்தி ஓங்க;
உற்றவர் உறவு எல்லாம்;
உண்மையில் நெஞ்சு பொங்க;
மற்றவர் சிந்தை கூட
மதிப்பினால் நிறைந்து பொங்கக்
கொற்றவள் ஆன ''சித்ரா''
குவலயம் ஆளுகின்றாள் !!!

ஆக்கம்: - ஜெ. கி. ஜெயசீலன்

இவர் இல்லத்தில் 15-11-92 இன்றுஞாயிற்றுக்கிழமை நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்வில் உற்றார் உறவினர்கள் போராளிகளையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வட்டு மேற்கு,
வட்டுக்கோட்டை.
[3969]
உன் பிரிவை தாங்கவொண்ணா
குடும்பத்தினர்

## நினைவு கூருகின்றோம் ...
## 1992-11-15

1987 ஆம் ஆண்டு இதே தினத்தில், தம்பனையில் தேசவிரோதிகளின் முகாம் மீதான தாக்குதலின் போது வீரச்சாவெய்திய

லெப். கொலின்ஸ் (சல்வதோர் லூக்நாதன் - கன்னாதிட்டி - மன்னார்)

விநாயகபுரம் பகுதியில், எதிர்பாராத விதமாகக் கைக்குண்டு வெடித்ததில் எமைப்பிரிந்த

ரொனி / ஐயர் வேலுப்பிள்ளை பூபாலபிள்ளை திருக்கோயில் அம்பாறை)

1988 ஆம் ஆண்டு அம்பாறை நிந்தாவூர்ப் பகுதியில் இந்தியப்படையினரின் சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

கப்டன் தாசன் (சண்முகம்பிள்ளை கணபதிப்பிள்ளை - காரைதீவு - 03 அம்பாறை)

நிந்தாவூர் நொண்டிச்சேனைப்பகுதியில் இந்தியப் படைசுட்டதில் வீரச்சாவெய்திய

ரஞ்சித் (கந்தக்குட்டி கிருபை - நிந்தாவூர், அம்பாறை)

கோரக்கல்லி மடுப்பகுதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய

சுகந்தன் (கோரக்கல்லிமடு)

ராஜா

1990ம் ஆண்டு காரைநகர் முகாமிலிருந்து வெளியேற முற்பட்ட சிறிலங்கா கடற்படையினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய

லெப். சுபராஜ் (நவரட்ணம் பரஞ்சோதி - களபூமி, காரைநகர், யாழ்.]

இதே சம்பவத்தின்போது சிறிலங்கா கடற்படையினர் பொதுமக்களின் குடியிருப்புக்களை நோக்கி மேற்கொண்ட எறிகணைத் தாக்குதல்களில் கொல்லப்பட்ட குழந்தை இளம்பெண் மற்றும், 3 தமிழ்ப்பெண்கள்

மட்டக்களப்பில், இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்ட மட்டு - வேப்பவெட்டுவானைச் சேர்ந்த தமிழ் இளைஞன்

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-5406)

சிந்தனைக்கு

தயங்குவோர்க்கும் அஞ்சுவோர்க்கும் எதுவும் அசாத்தியம் தான்.

- ஸர் வால்ட்டர் ஸ்காட்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்- 15-11- 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05


## சுதந்திரக்கட்சியின் நழுவல் கொள்கை

பாராளுமன்றம் கலைக்கப்பட்ட பின்பே இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வை சுதந்திரக்கட்சி மக்கள் முன்வைக்கும் என மனித சங்கிலிப் போராட்டம் தொடர்பாக கடந்த புதன் கிழமை மாலை நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் அம்பாந்தோட்டை எம். பியும், மனித சங்கிலிப் போராட்டத்தின் அமைப்பாளருமான மகிந்த ராஜபக்ஷா தெரிவித்தார்.

திரு. மகிந்த ராஜ பக்ஷாவின் இவ் அறிவிப்பானது இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு திட்டம் ஒன்றை முன் வைப்பதில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி நழுவல் போக்கைக் கடைப் பிடிப்பதையே தெளிவாகக் காட்டுவதாக உள்ளது. இதன்மூலம் தமிழரின் தேசிய இனப் பிரச்சினைக்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சியிடம் இருந்து ஒரு தீர்வுத் திட்டம் கிடைக்கப் போவதில்லை என்பதை ஊகித்துக்கொள்ளலாம்.

ஆனால் தீர்வுத் திட்டம்ஒன்றைமுன்வைப்பதில் தனியாக சிறிலங்கா சுதந்திரக்கட்சி மட்டுமல்ல ஐக்கிய தேசியக் கட்சியும் ஓர் நழுவல் போக்கைக் கடைப்பிடித்து வருகின்றது, அதாவது சிறிலங்கா சுதந்திரக் கட்சியோ அன்றி ஐக்கிய தேசியக் கட்சியோ பொறுப்பேற்று இனப்பிரச்சினைக்கு தீர்வுகண்டு விடத் தயாராக இல்லை. அவை பிரச்சினையை பின்தள்ளுவதிலும் பொறுப்பேற்பதைத் தவிர்ப்பதிலுமே அக்கறையாகவுள்ளன. கடந்த காலத்திலும் பிரச்சினையைப் பின் போடுதல் அல்லது காலதாமதம் செய்தல் என்னும் தந்திரத்தையே சிங்கள ஆட்சியாளர்கள்கடைப்பிடித்து வந்தனர். பிரச்சினையைப் பின்போடுவதன் மூலம் பிரச்சினையைத் தணியப்பண்ணலாம். அல்லது அழித்துவிடலாம் என்ற கொள்கையைக் கடைப் பிடித்தவர்களில் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா முக்கியமானவராகும். ஆனால் தேசிய இனப்பிரச்சினை ஒன்றில் இவ்வாறானதொரு தந்திரம் பிரச்சினையைவளர்க்குமே ஒழிய ஒருபோதும் தணித்துவிட உதவப் போவதில்லை ஏனெனில்

## பொலிஸாரின் உத்தரவால் எதிர்கட்சி கூட்டம்குழம்பியது

(கொழும்பு)

கொழும்பு கொம்பனித் தெரு டீமெல் பூங்கா மைதானத்தில் அவசரகாலச் சட்டம் தொடர்வதற்கு கண்டனம் தெரிவித்து எதிர்க்கட்சிகளால் நடத்தப்பட்ட பொதுக்கூட்டம் இரவு எட்டுமணியளவில் திடீரென இடைநிறுத்தப்பட்டது. திருமதி சிறிமாவோ தலைமையில் இடம்பெற்ற இக் கூட்டத்தில் பெருமளவு மக்கள் திரண்டிருந்தனர். லலித் அத்துலத் முதலி, வை. பி. டி சில்வா, பெர்னாட் சொய்ஸா, வாசுதேவநாணயக்கார, பந்துல குணவர்த்தனா, எல். டி. பண்டாரநாயக்கா, நிகால் பெரேரா, இந்திகா குணவர்த்தனா, றிச்சேர்ட் பத்திரான, எஸ். கிருஷ்ணன் ஆகியோர் உரையாற்றிய நிலையில் அவசர காலச் சட்டத்தின் கீழ் பொலிசார் கூட்டத்தைக் கலையும்படி கோரியுள்ளனர் என்று மேடையிலிருந்து அறிவிக்கப்பட்டதுடன் கூட்டம் இடை நிறுத்தப் பட்டது. திருமதி சிறிமாவோ, காமினிதிசாநாயக்கா போன்ற முக்கிய பிரமுகர்கள் பலரும் இக் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தது குறிப்பிடத் தக்கது.

## ல.ச.ச.க, கம்யூனிஸ்ட் கட்சிகளை இணைக்க முடிவு

(கொழும்பு)

லங்கா சமசமாஜக் கட்சியும், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியும் ஒன்றாக இணைந்து செயற்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரியவருகிறது. மக்களின் உரிமைகளையும், சுதந்திரத்தையும் பாதுகாப்பதற்கான போராட்டத்தில் முதற்படி இது என்று உணரப்படுவதால் இரு கட்சிகளும் இணைந்து ஒரே சோசலிசக் கட்சியாக செயற்பட முடிவு செய்திருப்பதாகவும், இதற்காக தொடர்ச்சியான கலந்துரையாடல்கள் நடத்தப்படுவதாகவும் லங்கா சமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளரான பெர்னாட் சொய்ஸா செய்தியாளர் மாநாட்டில் கலந்து [illegible] பேசும் போது குறிப்பிட்டார்.

அவர் அங்கு பேசுகையில், மேலும் புரட்சிகரக் கட்சியாக இதுவரை செயற்பட்டு வந்த லங்கா சமசமாஜக் கட்சி தற்போது அதன் கொள்கைத்திட்டத்தில் மாற்றங்கள் செய்திருப்பதாகவும், சோசலிசவாதிகள் மற்றும் ஜனநாயக வாதிகளுடன் இணைந்து சோலிச முன்னணி ஒன்றைக் கட்டியெழுப்ப விரும்புவதாகவும் குறிப்பிட்டார்.

இத்தகையதொரு முன்னணி அமைக்கப்படுவதற்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஒரு தடையாக இருக்கும் எனத் தாம் கருதவில்லை எனவும் கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் அவர் தெரிவித்தார்.

## வடக்கு, கிழக்கைப் பிரிக்க ஈ.என்.டி.எல்.எப் ஆதரவு

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாணங்களைத் தனித்தனி அலகுகளாக்கி இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணப்படுவதற்குஈ.என். டி. எல். எப்பும் ஆதரவு தெரிவித்துள்ளது.

ஈ. என். டி. எல். எப் சார்பான பாராளுமன்ற உறுப்பினரான ஞே. சிறிநிவாசன் இது பற்றி மேலும் கூறுகையில், தான் இதுபற்றி பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் தலைவர் மங்கள முனசிங்க, மற்றும் திருமதி சிறிமாவோ, அநுரா, எம். எச். எம். அஷ்ரப், எஸ். எல். குணசேகரா, உட்பட மக்கள் ஐக்கிய முன்னணி, தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள், சில முக்கிய அமைச்சர்கள் ஆகியோருடன் தொடர்பு கொண்டிருப்பதாகவும், பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் முன் தமது யோசனையை முன்வைக்கப்போவதாகவும் கூறியுள்ளார்.

அத்துடன் சமஷ்டி அமைப்பு முறையிலான அரசியலமைப்பு உருவாக்கப்படவேண்டும் எனவும், 1971ஆம் ஆண்டில் இருந்த சனத்தொகை விகிதாசாரமே கணக்கிடப்படவேண்டும் எனவும், தனித் தனியாகப் பிரிக்கப்படும் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு ஆகக்கூடுதலான அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படல் வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

## ஜனாதிபதி ஆட்சிமுறை உள்ளவரை இனப்பிரச்சினையை தீர்க்க முடியாது

### - காமினி திஸநாயக்கா

இந்நாட்டில் பூரண அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறை இருக்கும்வரை வடக்கு-கிழக்கு பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாது, மனித உரிமைகளை பாதுகாப்பேன், ஜனநாயக உரிமைகளை பாதுகாப்பேன் இலங்கை--இந்திய சமாதான உடன்படிக்கையில் அமுல்படுத்தாத விடயங்களை அமுல்படுத்துவேன் என மக்களுக்கு வாக்குறுதி கொடுத்து பதவிக்கு வந்த பிரேமதாசா அரசு தற்போது அவசரகால சட்டத்தின் கீழ் ஜனநாயக உரிமைகள் அனைத்தும் பறித்தும் மறுக்கப்பட்டுமிருக்கிறது.

இவ்வாறு கொழும்புடிமெல் பார்க் வீதியில் கடந்த புதன் கிழமை எதிரணிக் கட்சிகள் நடத்திய கூட்டத்தில் உரையாற்றிய முன்னாள் அமைச்சரும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின்பிரதித்தலைவர்களில் ஒருவரான காமினி திஸநாயக்கா தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில அவசர காலச் சட்டத்தின் கீழ் ஊர்வலங்கள் தடை செய்யப்பட்ட போதிலும் இன்று எந்தவொரு அனுமதியும் பெறாமல் ஊர்வலமாக மேடைக்கு வந்துள்ளோம்.

நாங்கள் ஜனாதிபதிக்கே நன்றி சொல்லக் கடமைப் பட்டுள்ளோம் ஏனெனில் அமைச்சர் பதவிகளைத் துறந்து நாட்டு மக்களின் சுதந்திரத்திற்காக போராடுகிறோம்.

மேலும் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் யுத்தம் தொடர்ந்து நடைபெறுகின்றது யுத்தத்தை இரண்டு மாதத்திற்குள் முடிப்போம் என பிரதமர் பலமுறை தெரிவித்தார் ஆனால் யுத்தம் தொடர்ந்து நடைபெறுகிறது.

தென்மாகாணத்தை பொறுத்த வரை எதிரணி அரசியல் கட்சிகள் அரசிற்கு எதிராக எடுக்கும் நடவடிக்கைகளை முறியடிக்கவே அவசர கால சட்டத்தை பயன்படுத்துகிறது.

அத்துடன் இன்று தொப்பிகல, வெலிகந்த, வெலிஓயா ஆகிய இடங்களிலுள்ள இராணுவ முகாம்களும் வாபஸ் பெறப்பட்டுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்ததுடன்;

ஜனாதிபதி தொடங்கிய ஜனசவிய திட்டத்திற்கும் எயிட்ஸ் நோய் பிடித்துள்ளதாகத் தெரிவித்தார்.

## சமயதீட்சை

சரசாலை இலங்கைத்திடல் அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளியம்மன் ஆலயத்தில் ஆலய பிரதம குரு சிவ ஸ்ரீ சி. சிதம்பரநாதக் குருக்கள் சமயதீட்சை வைபவத்தினை கடந்த வாரம் நடாத்தினார். (24)

## சேவைநலம் பாராட்டு விழா

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் ஓய்வு பெற்ற அதிபர் திரு செ பத்மநாதன் அவர்களின் சேவை நலம் பாராட்டு விழா நாளை காலை 9.00 மணிக்கு மேற்படி கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

அதிபர் கா. சந்திரபாலன் அவர்களின் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் பிரதம விருந்தினராக வடமாநில கல்விப்பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக ப சண்முகராசா, எஸ். வி. மகேசவேலு ஆகியோரும் கலந்து கொள்கின்றனர்.

செ. தேவதாசன், வே. நாகராசா, மு. தம்பையையா, ந. சிவசண்முகமூர்த்தி, பா. பொன்னுத்துரை ஆகியோர் சிறப்புரையாற்றவுள்ளனர்.

## லொறியில் குண்டுவெடிப்பு ஒருவர் படுகாயம்

(காலி)

காலியில்சீமெந்துஏற்றிவந்த லொறியில் வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். அவர் கராபிட்டிய ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

காலியில் இருந்து ஒருவர் லொறியை வாடகைக்கு அமர்த்தினார் என்றும் லொறி நிறுத்தப்பட்டபோது அந்த நபர் இறங்கிச்சென்றிருந்தார் என்றும் அதன் பின் குண்டு வெடித்தது என்றும் தெரிய வருகின்றது.

இதுவரை அந்தநபர்தொடர்பான செய்திகளை பெற முடியவில்லை என காலி வடக்கு பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## தடுப்பு முகாமில் சுரங்கம்; கைகலப்பில் கைதி பலி

(பலவத்தை)

பலவத்தை தடுப்பு முகாமில் 11ஆம் திகதி நண்பகல் அளவில் நடைபெற்ற கைகலப்பில் தடுப்பு முகாமில் உள்ள கைதி கொலை செய்யப்பட்டுள்ளதாக தடுப்பு முகாம் பாதுகாப்பு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

தடுப்பு முகாமில் 30 அடி நீளமுள்ள சுரங்கம் ஒன்றிலிருந்து இவரதுசடலம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. 11ஆம் திகதி காலை 8 45 மணியளவில் தடுப்பு முகாமின் மூன்றாவது மண்டபத்தில் பெரிய சத்தம் கேட்டதாகவும் இதனை தொடர்ந்து முகாமை திறந்து பார்த்தபோது மேற்படி சம்பவம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மரணமடைந்தவர்அனுராதபுரத்தைச் சேர்ந்த மகிந்த (26 வயது) இவரது சடலம் மருத்துவ பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்த மண்டபத்தில் 3மாதமாகசண்டைகள் நடைபெற்று வருவதாக விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

சுரங்கம் தோண்டப்பட்டது தொடர்பாக பாதுகாப்பு அதிகாரிக்கு தகவல் கொடுத்ததன் பேரில் இவர் கொலை செய்யப்பட்டதாக விசாரணை மூலம் தெரியவந்துள்ளது.

இந்த தடுப்பு முகாமில் சுமார் 8[illegible]0க்கு மேற்பட்டவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இதில் சுமார் 390 பேர் சுரங்கம் தோண்டினார்கள் என்பது தெரிய வந்துள்ளது.

தணித்துவிட உதவப் போவதில்லை ஏனெனில் தேசிய இனப்போராட்டமானது தனி ஒரு மனிதனுடனோ, ஒரு சம்பவத்துடனோ தொடர்புடையதல்ல. ஒரு இனத்துடன் தொடரான ஒடுக்குமுறை சம்பவத்துடன் தொடர்புடையதாகும். அத்தோடு ஒரு தலைமுறையுடனும் முடிந்துவிடக் கூடியதும் இல்லை. பல தலைமுறைகளைக் கடந்து செல்லக் கூடியது.

இந்நிலையில்தான் பிரச்சினையைப் பின்போடுதல் என்பது பிரச்சினையை மேலும் சிக்கலாக்குமே ஒழிய தீர்த்து வைக்க மாட்டாது கடந்த 15 வருடகாலத்தில் தமிழர் தேசிய இனவிடுதலைப் போராட்டம் பல்வேறு நொருக்கடிகள் அடக்குமுறைகள் மத்தியிலும் வளர்ந்து வந்த வேகமே இதற்குச் சான்று பகரக் கூடியதாகும்.

திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா பதவியில் இருக்கும் போது ஒரு தடவை குறிப்பிட்டார் ''நாம் எல்லைப்பகுதி நோக்கிச் செல்லாவிட்டால் எல்லைகள் எம்மை நோககி வந்துவிடும்'' என்று. இதே கருத்தை வலியுறுத்துமாப் போல் கடந்த வியாழக்கிழமை பாராளுமன்றத்தில் பேசிய ஐக்கியதேசிய கட்சி எம்.பி. டாக்டர் எம். பி. எம் சிறில் 'எமது நாட்டின் எல்லை எம்மை நோக்கிவரத் தொடங்கி இருக்கின்றது' என்றார்.

அதாவது அன்று பிரச்சினைகளை எல்லையுடன் வைத்திருக்க ஜே. ஆர். ஜெயவர்த்தனா விரும்பினார் ஆனால் அவரும் அவருக்கு பின்வந்தவர்களும் கடைப்பிடித்த காலம் கடத்தும்கொள்கையானது பிரச்சினைகள் அவர்களை நோக்கிக் கொண்டு சென்றுள்ளது. அதாவது இன்று பிரச்சினையானது அவர்களின் வீடுவரை சென்றுள்ளது.

இந்நிலையில் இனப்பிரச்சினை தொடர்பாக தொடர்ந்தும் நழுவல் போக்கையும், காலம் கடத்தும் கொள்கையையும் கடைப்பிடிப்பதனால் சிங்கள அரசியற்கட்சிகள் நன்மை அடையப்போவதில்லை சிங்கள மக்கள் இனப்பிரச்சினையின் தாக்கத்தை இன்று வெகுவாக உணரத் தலைப்பட்டு விட்டனர். ஆகையினால் சிங்கள மக்களுக்கு யதார்த்த நிலையை விளக்க இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண முற்படுவதே சிங்கள அரசியல் கட்சிகளுக்கும் நல்லது; இலங்கைக்கும் நல்லது இல்லையேல் இதற்காக எதிர் காலத்தில் சிங்களக் கட்சிகள் வருந்த வேண்டி வரும்.

# மத்திய கிழக்கில் ஆயுதப்பரவல் உறுதியாக தடுக்கப்பட வேண்டும்

## - பில் கிளிங்டன்

(லிட்டில்றொக்)

மத்தியகிழக்கில் ஏவாயுதங்கள் பரவுவதை தடுப்பதற்கு ஈரான், ஈராக், சிரியா, லிபியா, ஆகிய நாடுகளிடம் அபாயத்தை விளைவிக்கும் அழிவு ஆயுதங்களை இல்லாமல் செய்வதற்கும் உறுதி பூண்டுள்ளதாக புதிய அமெரிக்க ஜனாதிபதி பில் கிளிங்டன் தெரிவித்துள்ளார்.

மத்திய கிழக்கு சமாதான விடயம் தொடர்பாக சவூதி மன்னர் புவாத் எகிப்திய மன்னர் முபாரக் ஆகியோருடன் தொலைபேசியில் உரையாடிய கிளிங்டன் 'மத்திய கிழக்கு இன்சைட்' என்ற சஞ்சிகைக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இதைத் தெரிவித்தார்.

அபாயமான ஆயுதங்கள் மத்திய கிழக்கில் பரவுவதைத் தடுக்கவும் ஈரான். ஈராக் சிரியா, லிபியா ஆகிய நாடுகளின் கையில் அணுசக்தி இரசாயன ஆயுதங்கள் உட்பட அழிவு ஆயுதங்களை இல்லாமல் செய்வதற்கும் சர்வதேச முயற்சிக்காகவும் தீவிரமாகச் செயற்படப்போவதாக தெரிவித்தார்.

இதேவேளை இஸ்ரேலின் பலம் அதன் வைரிகளினதை விடச் சற்று அதிகமானதாக இருக்கவேண்டும். அரபு இஸ்ரேல்பிணக்கில் இஸ்ரேல் நிலைத்திருக்கும் நோக்கத்தையே தனது நிர்வாகம் கொண்டிருக்கும்என கிளிங்டன் மேலும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அரபு நாடுகள் இஸ்ரேலை பகிஷ்கரிப்பதைக் கைவிட வேண்டும் என்றும் அதற்காகத் தம்மால் இயன்ற அனைத்தையும்செய்யப்போவதாகத் தெரிவித்தார்.

அதே சமயம் இராணுவ உபயோகத்திற்கான தொழில்நுட்பத்தை தொழில்வள நாடுகள் ஈரானுக்கு விற்பதை தவிர்க்க அமெரிக்கா ராஜிய முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது.

மத்திய கிழக்கின் ஸ்திரத்துக்கு ஈரான் அச்சுறுத்தலாக இருப்பதாகவும் எனவே அதன் இராணுவ சக்தி அதிகரிப்பது கவலைஏற்படுத்துவதாகவெளிநாட்டு அமைச்சு அதிகாரி பௌச்சர் தெரிவித்துள்ளார்.

# லெபனான் எல்லை நோக்கி இஸ்ரேலிய டாங்கிகள் நகர்வு

(மெடுல்லா)

லெபனானின் முஸ்லிம் கெரில்லாக்களின் றொக்கட் தாக்குதலை நிறுத்த இஸ்ரேலிய டாங்கிகளும், படைப்பிரிவினரும் எல்லையின் இரு பிரிவுகளிலும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக இஸ்ரேலிய இராணுவ ஜெனரல் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தென் லெபனானின்ஹிஸ்புல்லா தலைவர்கள் கூடும் இடத்தை இஸ்ரேலிய விமானங்கள் தாக்கிவிட்டு திரும்பியுள்ளதாக இஸ்ரேலிய இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய் இரவு இஸ்ரேலிய விமானங்கள் துருப்புக்கள் என்பன லெபனானுக்குள் சென்ற வண்ணம் இருந்தன.

எங்கள் எதிர்ப்பு நிற்க வேண்டுமானால் இஸ்ரேலியர்கள் எங்கள் எல்லோரையும் கொல்ல வேண்டும் எங்கள் வீடுகள் அனைத்தையும் அழிக்க வேண்டும், எங்கள் பிள்ளைகளையும் அழிக்கவேண்டும் என ஹிஸ்புல்லாத் தலைவர் ஷேக் ஹசன் நஸ்ருல்லா தனது ஆதரவாளர் மத்தியில் உரை நிகழ்த்தும்போது தெரிவித்ததுடன் எங்கள் மத்தியில் ஆயிரக்கணக்கான தற்கொலை வீரர்களும் இருப்பதாக தெரிவித்துள்ளார்.

# 53 வயதுப் பாட்டிக்கு இரட்டைக் குழந்தைகள் பிரசவம்

(கலிபோர்னியா)

லொஸ் ஏன்ஜல்ஸில் அனஹெய்ம் மாட்டின் லூத்தர் ஆஸ்பத்திரியில் 53 வயதுப் பாட்டி ஒருவர் இரட்டைக் குழந்தைகளை பிரசவித்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

மேரி ஷியரில் என்ற இப்பெண்மணிக்கு பரிசோதனைக் குழாய் மூலம் கருத்தரிக்கச் செய்யப்பட்டது 12 வாரங்களுக்கு முன்னதாகவே இக் குழந்தைகள் பிரசவிக்கப்பட்டுள்ளதாகவும் இக் குழந்தைகள் நலமே உள்ளதாகவும் டாக்டர்கள் தெரிவித்துள்ளனர்.

மேரி ஷியரிங்கு பூரண சுகத்துடன் இருப்பதாக அவரது கணவரான டொன் :(வயது 32) தெரிவித்துள்ளார்.

# முன்னாள் பிரதமர் வி. பி. சிங்கை ஷர்வுத்மேத்தா சந்தித்தாராம்

மூன்று மத்திய அமைச்சர்களையும், முன்னாள் பிரதமர் வி பி, சிங்கையும் தாம் சந்தித்து இருப்பதாக பிரபல பங்குதரகரான ஷர்வுத் மேத்தா தெரிவித்தார்.

பங்குச் சந்தை ஊழல் மோசடி சம்பந்தமாக விசாரணை செய்துவரும் கூட்டுப் பாராளுமன்றக் குழுவின் முன்பாக சாட்சியமளித்த ஷர்வுத் மேத்தா மேலும் கூறுகையில்; தமது வீட்டிலும் அலுவலகத்திலும் வருமானவரிச் சோதனைகள் போடப்பட்டதை யடுத்து தா மத்திய அமைச்சர் நிதித்துறை இணை அமைச்சர் ராமேஷ்வர் டாகுரைச் சந்தித்துப் பேசியதாகவும் அப்போது மத்திய நேர்முக வரிகள் வாரியத்திடம் புகாரிடும்படி அமைச்சர் ஆலோசனை வழங்கினார் என்றும் குறிப்பிட்டார்

பங்குத்தரகர்களுக்கு வங்கிகள் அளித்துவரும ரூட்டின் வசிலிட்டியைதான் பயன்படுத்தியதாகவும் இந்திய மத்திய றிசேர்வ் வங்கியின்வழிகாட்டுக் குறிப்புக்களை மீறும வகையில் அமைந்திருந்த பங்குச் சந்தை நடவடிக்கைகளை தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். இவ்விதம் வழிகாட்டு நெறிமுறை மீறப்படுவது றிசேர்வ் வங்கிக்கும் தெரியும் என்றும் தெரிவித்தார்

பெங்களூரில் தொழில் அதிபர் எஸ். என். சதுர்வேதி அளித்த பெரிய விருந்து ஒன்றில் மத்திய அமைச்சர்களான பல்ராம் ஜாக்கர், குலாம் நபி ஆஷாத் ஆகியோரை சந்தித்ததாகவும் மேத்தா மேலும் குறிப்பிட்டார்.

## விரைவில் தீர்வு காணப்படவேண்டும்

அயோத்தியா விவகாரத்திற்கு இயலுமான; விரைவில் ஏற்புடைய தீர்வொன்றை பிரதமர் நரசிம்மராவ் காண வேண்டும் என்று பாரதீய ஜனதாக்கட்சி வலியுறுத்திக் கேட்டுள்ளது அதேவேளை சட்டபூர்வ அந்தஸ்து எதுவு மற்ற தேசிய ஒருமைப்பாட்டு சபையில் இப்பிரச்சினை விவாதிக்கப்படுவதை கட்சி விரும்பவில்லை என்றும் அக்கட்சி வட்டாரங்கள் கூறியுள்ளன.

# ஈழநாதம்

முன்னாள் டி. ஐ. ஜி. உடுகம்பொல

## சத்தியக் கடதாசி பிரசுரித்தமை சட்டவிரோத செயலல்ல

### - மேல் நீதிமன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரேமதாசா உடுகம்பொலவினால் உறுதிப்படுத்தப்பட்ட சத்தியக் கடதாசிகளைப் பிரசுரித்தமை சட்டவிரோதமான செயல் அல்ல என்றும், அதனால் 'அத்த' பத்திரிகையின் செய்தி ஆசிரியர் எல். பி. வணிகசேகரா மற்றும் வெளியீட்டாளர் டபிள்யூ ஏ. தர்மசேனா ஆகியோரை விடுதலை செய்வதாகவும் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஜே. பி. வீரசூரிய தமது தீர்ப்பில் கூறியுள்ளார்.

அவர் தமது தீர்ப்பில் மேலும் கூறுகையில், சட்ட விரோதமான அமைப்பு ஒன்றின் செயல்பாடு பற்றிய பிரதிப் பொலிஸ்மாஅதிபரின் அறிக்கை அரசாங்கத்தை எவ்வகையிலும் பலவீனப்படுத்தாது என்றும், அந்த அறிக்கையைப் பிரசுரிப்பது மக்களுக்கு உண்மைகளை அறியச் செய்வது செய்திப்பத்திரிகையின் உரிமை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் எல்லாவிதமான உண்மைகளையும் அறிவதற்கு உரித்துடையவர்கள் என்றும் கூறியுள்ள நீதிபதி, ஏப்ரல் 8, 1992 ஆம் திகதியில் அத்த இதழில் பிரசுரமான மேற்படி அறிக்கை அவசரகால சட்ட விதிகளை எவ்வகையிலும் மீறவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்

மேல் நீதிமன்றத்தின் இந்த தீர்ப்பிற்கு எதிராக சட்டமா அதிபர் திணைக்களம், உயர் நீதிமன்றத்திடம் அப்பீல் செய்யும் என்று அரச தரப்பு சட்டத்தரணி ஏ.ஆர்.சி.பெரேரா சுட்டிக்காட்டியுள்ளார்.

## 'செஞ்சோலை' பாடல்கள் ஒலிப்பதிவு நாடா வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டின் பல பாகங்களிலும் நடாத்தப்பட்டு இலட்சக் கணக்கான மக்களினதும் போராளிகளினதும் பாராட்டுதல்களைப் பெற்றுக் கொண்ட ''செஞ்சோலை'' பாடல்களின் ஒலிப்பதிவு நாடா எதிர்வரும் வியாழன் பிற்பகல் நான்கு மணியளவில் கைலாசபதி கலையரங்கில் வெளியிட்டு வைக்கப்பட உள்ளது.

இவ்வெளியீட்டு விழாவில் வாழ்த்துரைகள், சிறப்புரைகள், மதிப்பீட்டு உரைகள் என்பனவற்றுடன் கலைஞர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் இடம் பெறவிருக்கிறது.

இவ் வெளியீட்டு விழாவில் கலந்து கொள்ள வரும்படி கலைஞர்கள், ஆர்வலர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் செஞ்சோலை நிர்வாகம் அழைப்பு விடுத்துள்ளது.

### அதிபர்களுக்கான கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வேலணைக் கோட்ட அதிபர்கள், மாணவ தலைவர்களுக்கான கருத்தரங்குகள் நடைபெறவுள்ளன.

வேலணைக் கோட்ட அதிபர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு இன்று செவ். ஜோன்ஸ் அக்கடமியிலும், மாணவ தலைவர்களுக்கான கருத்தரங்கு நாளை மறுநாள்நியூமாஸ்ரர் இன்ஸ்ரிரியூட்டிலும் நடைபெறும். இவ்விரு கருத்தரங்குகளும் காலை 8.30 முதல் மாலை 5.30 வரை நடைபெறவுள்ளன. யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் கருத்துரை வழங்குவார்கள். சம்பந்தப்பட்டவர்களைக் கருத்தரங்கில் கலந்து கொள்ளுமாறு வேலணைக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி. புலேந்திரனின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

இலங்கை

பிட்டார். அத்துடன் இரண்டு மில்லியன் இளைஞர்கள் வேலை வாய்ப்பு அற்று இருப்பதாகவும் இவர்களில் 27,500 பேர் பட்டதாரிகள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### 12-ம் நாள் நினைவஞ்சலி



| ஜனனம் | வீரச்சாவு |
|---|---|
| 18 | 05 |
| — | — |
| 09 | 11 |
| — | — |

## தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளளிப்புப் பெறுவோர்

**நல்லூர் யா/ ந.**

| | |
|---|---|
| 1. 21 | 6. 4209 |
| 2. 25 | 7. 1299 |
| 3. 490 | 8. 3447 |
| 4. 506 | 9. 5605. |
| 5. 2397 | |

**யாழ்ப்பாணம் யா/ யா**

| | |
|---|---|
| 1. 59 | 5. 4318 |
| 2. 178 | 6. 195 |
| 3. 544 | 7. 4687 |
| 4. 3417 | |

**கோப்பாய் யா / கோ**

| | |
|---|---|
| 1. 3795 | 4. 3145 |
| 2. 5674 | 5. 6315 |
| 3. 715 | |

**மானிப்பாய் யா / மா**

| | |
|---|---|
| 1. 2834 | 4. 119 |
| 2. 3667 | 5. 3292 |
| 3. 14 | |

**தெல்லிப்பழை யா / தெ**

| | |
|---|---|
| 1. 139 | 3. 913 |
| 2. 602 | 4. 4138 |

**சங்கானை யா / ச**

| | |
|---|---|
| 1. 3189 | 3. 4115 |
| 2. 3184 | |

**காரைநகர் யா / கா**

| | |
|---|---|
| 1. 356 | 3. 714 |
| 2. 79 | |

**வேலணை யா / வே**

| | |
|---|---|
| 1. 176 | 6. 87 |
| 2. 218 | 7. 829 |
| 3. 1284 | 8. 1503 |
| 4. 1771 | 9. 1981 |
| 5. 1887 | |

**கரவெட்டி யா / க**

| | |
|---|---|
| 1. 20 | 6. 27 |
| 2. 274 | 7. 128 |
| 3. 477 | 8. 2697 |
| 4. 829 | 9. 3263 |
| 5. 834 | 10. 4190 |

**பருத்தித்துறை யா / பரு**

| | |
|---|---|
| 1. 109 | 3. 729 |
| 2. 376 | |

**சாவகச்சேரி யா / சா**

| | |
|---|---|
| 1. 569 | 4. 3426 |
| 2. 816 | 5. 4311 |
| 3. 66 | |

**வெளியகல்வு யா / வெ**

| | |
|---|---|
| 1. 41 | 4. 794 |

**நல்லூர் யா / ந. 1992**

**மாசி**

| | |
|---|---|
| 1. 18 | 6 3124 |
| 2. 142 | 7. 4050 |
| 3. 277 | 8. 4265 |
| 4. 334 | 9. 5780 |
| 5. 844 | 10. 6013 |

**பங்குனி**

| | |
|---|---|
| 1. 219 | 6. 2517 |
| 2. 381 | 7. 2584 |
| 3. 1402 | 8 3581 |
| 4. 2083 | 9. 4109 |
| 5. 2351 | 10. 4792 |

**சித்திரை**

| | |
|---|---|
| 1. 98 | 6. 3755 |
| 2. 372 | 7. 3797 |
| 3. 580 | 8. 5246 |
| 4. 1090 | 9. 5580 |
| 5. 2125 | 10. 5875 |

**வைகாசி**

| | |
|---|---|
| 1. 234 | 6. 1781 |
| 2. 386 | 7. 2627 |
| 3. 401 | 8. 3541 |
| 4. 785 | 9. 4552 |
| 5. 866 | 10. 5206 |

**ஆனி**

| | |
|---|---|
| 1. 64 | 6. 3136 |
| 2. 464 | 7. 4269 |
| 3. 1215 | 8. 5113 |
| 4. 1692 | 9. 5392 |
| 5. 2437 | 10. 5528 |

**ஆடி**

| | |
|---|---|
| 1. 214 | 6. 875 |
| 2. 310 | 7. 892 |
| 3. 362 | 8. 2003 |
| 4. 573 | 9. 5482 |
| 5 612 | 10. 5623 |

**ஆவணி**

| | |
|---|---|
| 1. 197 | 6. 1767 |
| 2. 744 | 7. 2464 |
| 3. 822 | 8. 2589 |
| 4. 825 | 9. 2905 |
| 5. 1668 | 10. 5569 |

**புரட்டாதி**

| | |
|---|---|
| 1. 103 | 6. 943 |
| 2. 223 | 7. 2712 |
| 3. 232 | 8. 3329 |
| 4. 684 | 9 4827 |
| 5. 721 | 10. 5733 |

**ஐப்பசி**

| | |
|---|---|
| 1. 81 | 6. 2806 |
| 2. 287 | 7. 4243 |
| 3. 826 | 8. 4436 |
| 4. 964 | 9. 4842 |
| 5. 1481 | 10. 5508 |

**கார்த்திகை**

| | |
|---|---|
| 1. [illegible] | 6. 3343 |

மண்ணிலா எங்கள் வீரரைப் புதைத்தோம்?
இல்லையே
எங்கள் மனங்களில் அல்லவா விதைத்தோம்
இன்னும், இதன்பிறகும் என்ன தான் தயக்கம்
எழுந்துவா தமிழரின் தாயகம் பிறக்கும்

(மாவீரர் நாள்-1992 சுவரொட்டிகள் பதாதை வசனங்கள்)

### வட்டாரீதி

கருத்தரங்குகள் இடம் பெறவுள்ளன. வலிகாமம் கோட்டத்தில் மாலை 6-30 மணிக்கு சண்டிலிப்பாய் வட்டத்தில் கட்டுடை சுபாஸ் சனசமூக நிலையத்திலும், நல்லூர் வட்டத்திலும் நாயன்மார் கட்டு சனசமூக நிலையத்திலும், கல்வியங்காடு ஞான பாஸ்கரோதயா சனசமூக நிலையத்திலும் யாழ்ப்பாண வட்டத்தில் வண்ணார்பண்ணை வள்ளுவன் சனசமூக நிலையத்திலும் உடுவில் வட்டத்தில் கந்தரோடை ஞானவைரவர் சனசமூகநிலையத்திலும் அவ்வப் பகுதி சிற்றூர் பொறுப்பாளர் தலைமையில் கருத்தரங்குகள் நடைபெறும்.

தென்மராட்சி கோட்டத்தில் மாலை 7-30 மணிக்குக் கைதடி வட்டத்தில் கைதடி மத்தி ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்தில் யோக்கின் தலைமையில் நடைபெறும் கருத்தரங்கில் அன்பு உரையாற்றுவார். கொடிகாமம் வட்டத்தில் இரவு 7-00 மணிக்கு அல்லாரை தெற்கு நிதி சனசமூக நிலையத்தில் இளம்பிறை தலைமையில் நடைபெறும் கருத்தரங்கில் அனந்தா உரையாற்றுவார். பளைவட்டத்தில் இரவு 7-00 மணிக்கு தம்பகாமம் கேடில்ஸ் சனசமூக நிலையத்தில் கலைவாணன் தலைமையில் நடைபெறவுள்ள கூட்டத்தில் தமிழ்மங்கை உரையாற்றுவார். சாவகச்சேரி வட்டத்தில் இரவு 7-00 மணிக்கு சங்கத்தானை இத்தியடிப்பிள்ளையார் கோவிலடியில் எழிலன் தலைமையில் நடைபெறவுள்ள கூட்டத்தில் தமிழ்மங்கை உரையாற்றுவார்.

தீவகக்கோட்டத்தில் பிற்பகல் 5-00 மணிக்கு கெற்பலி பண்டிதர் குடியிருப்பில் பிரியன் தலைமையில் நடைபெறவுள்ள கருத்தரங்கில் காவலன், அன்பரசி ஆகியோர் உரையாற்றுவர்.

கடற் புலிகளால் வடமராட்சி கிழக்கு வட்டத்தில் பிற்பகல் 5-00 மணிக்கு வத்திராயன் சனசமூகநிலையத்திலும் வடமராட்சி வடக்கு வட்டப்பிரிவில் மு ப. 10 மணிக்கு தொண்டமானாறு சனசமூக நிலையத்திலும் பிற்பகல் 4.00 மணிக்கு ஊரிக்காடு சனசமூக நிலையத்திலும் வலிகாமம் கிழக்கு வட்டவைப் பிரிவில் பிற்பகல் 4.00 மணிக்கு அரியாலை பூம்புகார் சனசமூக நிலையத்திலும் பிற்பகல் 5.00 மணிக்கு மணிப்புரி சனசமூக நிலையத்திலும் பிற்பகல் 6.00 மணிக்கு கொழும்புத்துறை சனசமூக நிலையத்திலும் கருத்தரங்குகள் நடைபெறும்.

இதே வேளை இன்று சிரமதானப் பணிகள்கெற்பலிபண்டிதர் குடியிருப்பிலும், எல்லங்குளம் பொதுமயானம் சிரமைத்தலும் சங்கானை பிரதான வீதி.கலைநகர் நேறாஜி சனசமூக நிலைய வீதி புனரமைத்தலும், கோப்பாய் வீதி, சிவகுமாரன் பூங்காவில் சிரமதானமும் சண்டிலிப்பாய் பிரதான வீதி புனரமைத்தலும் உடுவில் சிந்துமுகாம், உடுவில் ஆச்சிரமம், இணுவில் முகாம் ஆகியவற்றில் சிரமதானப் பணிகளும், கொக்குவில் நந்தாவில் வாய்க்கால் புனரமைத்தலும் கடற்புலிகளால் மருதங்கேணி வைத்தியசாலை சுற்றாடல் சுத்தம் செய்தலும் மாம்நடுகையும் இடம் பெறும்.

### 31-ம்நாள் கண்ணீர் அஞ்சலி

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 24 | 16 |
| — | — |
| 01 | 10 |
| — | — |
| 1924 | 1992 |

### திருமதி பத்மாவதிசிவஞானசுந்தரம்



— —

1970 1992

## 2-ம் லெப். குகன் / நில்டன்

(சிதம்பரப்பிள்ளை இந்திரகுமார்)

நிகழும் ஆங்கிர - ஸ்ரீவருடம் கார்த்திகைத் திங்கள் 1 ஆம் திகதி 16-11-1992 திங்கட்கிழமை 12 ஆம் நாள் எமது மகன் இந்திரகுமார் குகன் / நில்டன் அவருடைய பாஷண உத்வரஸனக் கிரியைகள் காலை 6.00 மணிக்கும், சபிண்டிகரணம் பகல் 12 மணிக்கும் நடைபெறும். இதில் கலந்து கொள்ளுமாறு நண்பர்கள், உற்றார், உறவினர்கள் யாவரையும் கேட்டுக்கொள்கிறோம்.

சதா. சிதம்பரப்பிள்ளை குருக்கள்,
மிந்திரன் அம்மன் கோயில்,
பூசகரும், ஆதீனமும்,
துன்னாலை.

இங்ஙனம்
பெற்றோர்,
சகோதரர்கள்

(3643)

## 45-ம் நாள் நினைவஞ்சலி



| வீரஜனனம் | வீரச்சாவு |
|---|---|
| 24 | 02 |
| — | — |
| 10 | 10 |
| — | — |
| 1974 | 1992 |

## வீரவேங்கை பதுமன்

(முத்துத்தம்பி குகதாஸ்)

நிலாவெளி, வேலூர்

02-10-1992 அன்று கட்டைக்காட்டில் நடைபெற்ற தாக்குதலில் வீரச்சாவடைந்த வீரவேங்கை பதுமனின் 45 வது நாளான இன்று. நடைபெறும் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு போராளிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

22, துரைராசா வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

முத்துத்தம்பி
குடும்பத்தினர்

(3646)

பதாகவும் இவர்களில் 27,500 பேர் பட்டதாரிகள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

உலகிலேயே ஆள் வீத வருமானம் 80 டாலர்களுக்கும் குறைவாக இருக்கும் மொசாம்பிக்கில் கூட நிறைகுறைவான குழந்தைகள் பிறப்பது சிறிலங்காவை விட குறைவானது என்றும் சுட்டிக்காட்டினார்.

வெளியகல்வு
யா / வெ

| | |
|---|---|
| 1. 41 | 4. 794 |
| 2. 705 | 5. 837 |
| 3. 903 | |

உடுவில்
யா / உ

1. 3026

## 45-ம் நாள் நினைவஞ்சலி



| வீரப்பிறப்பு | வீரச்சாவு |
|---|---|
| 01 | 02 |
| — | — |
| 08 | 10 |
| — | — |
| 1971 | 1992 |

## வீரவேங்கை செல்லப்பன்

(சுப்பிரமணியம் லோகேஸ்வரன்)

4-ம் வட்டாரம், புங்குடுதீவு.

வீரனே..............!
நீ விழுந்து விடவில்லை
எம்தேசத்தில் - எமக்குள்
எழுந்து நிற்கின்றாய்

- தீவகமக்கள்

கல்வயல்,
சாவகச்சேரி.

(3642)

## கணக்காளர் தேவை

ஈழநாதம் பணிமனையில் கடமை புரிய தகுதி வாய்ந்த கணக்காளர் தேவை கல்விச் சான்றிதழ்கள், அனுபவ அத்தாட்சிப்பத்திரங்கள் என்பனவற்றுடன் 18 - 11 - 1992 புதன்கிழமை அன்று காலை 10.00 மணிக்கு நேரில் வரவும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

ஈழநாதம் பணிமனை,
31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

பொதுமுகாமையாளர்.

| | |
|---|---|
| 4. 904 | 9. 1512 |
| 5. 1481 | 10. 5508 |

கார்த்திகை

| | |
|---|---|
| 1. 33 | 6. 3343 |
| 2. 792 | 7. 4650 |
| 3 1240 | 8. 5034 |
| 4. 1582 | 9. 5'75 |
| 5. 2633 | 10. 5936 |

### நெஞ்சு

வைத்தது. வான்வரை உயர்ந்து முகிலினை வருடிவிடுகிறது எமது கொடி. அனைத்துலகமே எம்மை பிரமிப்பாய் நோக்குகிறது.

இத்தகு சாதனையாளர்களே, ''எமது மாவீரர்கள்'' என் கையில், எமமுன்னே உறுதி பெருகுகிறது; நெஞ்சு நிமிர்கிறது; உயிர் மூச்சில் பெரும் வலுபிறக்கிறது சகல அடக்கு முறைகளையும் தகர்த்தெறிந்த சுதந்திர சமதர்ம தமிழீழம் கண்ணெதிரே மிளிர்கிறது! என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மாவீரர்

விருத்திச் சங்கங்கள் போன்ற பல்வேறு இடங்களில் மாவீரர் நினைவு வளைவுகளும் சில இடங்களில் மாவீரர் நினைவுச் சிகரங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

பிரதான வீதிகளில் இடையிடையே மாவீரர்களை நினைவு கூரும் வகையிலானதும், எழிச்சியூட்டுவதுமான வாசகங்கள் அடங்கிய பதாகைகள் கட்டப்பட்டு காற்றில் அசைந்த வண்ணமிருக்கின்றன. அத்துடன் வீதிகளில் சிவப்பு, மஞ்சல் ஆகிய வர்ணங்களில் தோரணங்கள் கட்டப்பட்டிருக்கின்றன.

### கன்ரபரி

யாழ்ப்பாணம் அழைத்துவர சிலர் மும்மரமாக ஈடுபட்டு வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### போர்முனை

தானிலிருந்து டாக்டர்கள் சிலர் வந்தாலும் கூட டாக்டர்களுக்குப் பற்றாக்குறை இருக்கும் எனவும், ரஷ்யாவிலிருந்து வரும் டாக்டர்களை வரவேற்கக் காத்திருப்பதாகவும் குறிப்பிட்டார்.

## திருமதி பத்மாவதிசிவஞானசுந்தரம்

எமது அன்புத் தெய்வத்தின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், பல வழிகளில் உதவிகள் புரிந்தவர்களுக்கும் எமது இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் 15-11-92 இன்று எமது இல்லத்தில் நடைபெறும்.

இலஷ்மி வாசா
வல்லை வீதி,
அச்சுவேலி. (3644)

சி.இராசேந்திரம்(சகோதரன்)
ப. யோகநாதன்(மருமகன்)

## தொலைபேசி விற்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்

தொலை பேசிகள் வைத்திருப்பவர்களிடம் இருந்து தொலைபேசிகள் விலை கொடுத்து வாங்கப்படும்.

தொலைபேசியின் வெளித்தோற்றம், தொழிற்பாடு (நல்லநிலை, பழுது) ஆகியவற்றின் தன்மைக்கேற்பவிலை தீர்மானிக்கப்படும்.

தொலைபேசிகள் விற்க விரும்புவோர் கீழ்க் காணும் முகவரிக்கு தொலைபேசிகளையும் கொண்டுநேரில் வரவும்

விளம்பர இலக்கம் 176

**மே/பா. ஈழநாதம்**

31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

(3645)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 14-11-92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 6656

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்:
27-8999, 42-9326, 27-5823, 27-9136, 27-7750, 22-7956, 41-9696, 28-3004, 41-9038, 42-1178, 24-1040, 26-2941, 26-7286, 27-994, 26-525, 41-2509, 41-4129, 27-5077, 42-2841, 26-8497, 28-4545, 41-9396, 28-6546, 26-9291, 41-8432, 25-6649, 37-4146, 71-4984.

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கம்;-
26-1583, 24 8391, 27-4024, 26-139, 42-2397, 26-1728, 26 3582, 24-0521, 24-7327, 26-7663, 24-7078, 42-9112, 26-4792, 42-6625, 24-4465.

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.